**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை,</u>**

**<u>கிருஷ்ணகிரி மாவட்டம்.</u>**

அசல் வழக்கு எண்.50/2013 நாள்: 23.01.2020

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர், நீதிமன்றத்தில் திரு.மாதையன், பென்ஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

பெயர் : ரமேஷ்

தந்தை பெயர் : அண்ணாமலை

கிராமம் : தாலுக்கா :

வயது : வேலை :

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் எனது தரப்பில் சாட்சியாக முன்னிலையாகி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள இந்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளும், என்னால் சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டதாகும். இதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். இதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான்.

1. 03.06.1993 தேதியிட்ட எனக்கும் 1, 2 பிரதிவாதிகளுக்கும் எழுதி கொடுக்கப்பட்ட உயில் பத்திரம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும்,

2. 09.06.1993 தேதியிட்ட 4-ம் பிரதிவாதி பெயரில் எழுதி கொடுக்கப்பட்ட கிரையபத்திரம் பதிவு நகல் வா.சா.ஆ.2 ஆகவும்,

3. 12.07.1996 தேதியிட்ட கிரையபத்திரம் பதிவு நகல் வா.சா.ஆ.3 ஆகவும்,

4. 06.05.1996 தேதியிட்ட கிரையபத்திரம் பதிவு நகல் வா.சா.ஆ.4 ஆகவும்,

5. 14.11.2012 தேதியிட்ட கணிணி சிட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகவும்,

6. படமுத்து (எ) ராமசாமி போயன் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது. 1 முதல் 3 மற்றும் 4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் வழக்காவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்று ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணை குறித்து வழக்கின் இறுதியில் விடை காணப்படும் என்று ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் 4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.